முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 841

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.01.2022, திங்கட்கிழமை

1. அருட்குருவாய் உலக மக்களுக்கு
ஆறுமுகன் என் அவதாரமாக வெளிப்பட்டு
பொருள்பற்று நீக்கி உலகமக்களெல்லாம்
புண்ணியவழி நடந்து உன்மார்க்கத்தின் வழி
2. வழிதனில் ஞானிகளாக வேண்டி
வல்லமைபட என்பால் வரம் பெற்றுவந்த அரங்கனே
தெளிவூட்டி உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
தெரிவிப்பேன் சுப்ரமணியப்பெருமான் யானும் இனிதே
3. இனிதே பிலவ கலை திங்களில் உரைப்பேன்
(பிலவ வருடம் தை மாதம் 4ம் நாள், 17.01.2022 திங்கட்கிழமை)
ஏழாம்படைவீட்டில் ஆறுமுகன் என் சக்தி
கனிவுகொண்டு உந்தனுக்கு துணிவாக நிற்க
கருணைகொண்டு உன் மார்க்கத்தை ஏற்று வரும் மக்களெல்லாம்
4. மக்களெல்லாம் ஞானவான்கள் என்கின்ற அடையாளத்தோடு
மரணத்தை வெல்லும் மகா சக்தி பெற்று
ஆக்கமுடன் உன் தர்மபலத்தை பெருக்கி அதன்வழி அவர்களெல்லாம் உதவிவர
அகிலத்தார் அனைத்துபேருமே தர்மவான்களெனும் அடையாளமோடு
5. அகிலமெங்கும் தர்மபலம் கூட்டி
அழியாமை பெற்று உலகமெங்கிலும் ஞானவான்களை உருவாக்கி
ஆக்கியே அரங்கன் உன் அவதார நோக்கமாக
அகிலம் ஞான ஆட்சி பெறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–